உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

# விழா

★

# புத்தகக் கண்காட்சி

★

ஜூன் 29, 30 — ஜூலை 1, 2

1969

உ

ஸ்ரீலஸ்ரீ

# ஆறுமுகநாவலர் விழா

# புத்தகக் கண்காட்சி

ஜுன் 29, 30 — ஜுலை 1, 2

1969

உ

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை நியமித்த
## நாவலர் புத்தகக் கண்காட்சிக் குழு

**தலைவர் :**

திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள், B. A.
*( ஓய்வுபெற்ற அதிபர், வண்ணை-வைத்தீஸ்வர வித்தியாலயம் )*

**அமைப்பாளர் :**

திரு. க. சொக்கலிங்கம் அவர்கள், B. A.
*( ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி )*

**செயற்குழுவினர் :**


திரு. ச. தனஞ்சயராசசிங்கம் அவர்கள், B.A.(Hons),M.Litt.C.L.
*( தமிழ் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை )*

திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், B. A.
*( ஓய்வுபெற்ற அதிபர், மயிலணி, சுன்ஞகம் )*

திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள்
*( ஆசிரியர், உரும்பராய் )*

திரு. பெ. கணநாதபிள்ளை அவர்கள், B. A.
*( கல்வித் திணைக்களப் பாடநூற்சபை, கொழும்பு )*

திரு. கா. மாணிக்கவாசகர் அவர்கள்
*( நூலகர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி )*



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

உ

சிவமயம்

# முன்னுரை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவின் ஓர் அங்கமாகப் புத்தகக் கண்காட்சியை ஒழுங்கு செய்திருப்பது மிகப் பொருத்தமான செயலாகும். நாவலர் அவர்கள் போன்ற பெரியார்களின் சீவிய காலத்தில் வாழும் மக்கள் அவர்களைத் தரிசிக்கவும், அவர்களின் உபதேசங்களைக் கேட்டுப் பயனடையவும் முடியும். ஆனால் அவர்கள் மறைந்ததன்பின் மக்களுக்கு உறுதுணையாயிருப்பவை, அவர்கள் விட்டுச்சென்ற நூல்களே. இந் நூல்களில் அவர்களின் சிந்தனைகளும் இலட்சியங்களும் பொதிந்து கிடக்கும். அவற்றைப் படிப்பதாலும் பாராயணஞ் செய்வதாலும் மக்கள் உய்தி பெறுவர்.

நாவலர் அவர்கள் சிறந்த உரைநடையாசிரியராயும், உரையாசிரியராயும், பதிப்பாசிரியராயும் விளங்கினர். காலத்துக்கு வேண்டியவை உரைநடை நூல்கள் என்பதை நன்குணர்ந்து, அவற்றை எழுதுவதிலேயே தமது வாழ்க்கையில் பெரும் பகுதியைச் செலவழித்தனர். மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய சில செய்யுள் நூல்களுக்கு உரையெழுதினர். தமிழ் இலக்கியங்கள் அழிந்துபோகாமல் காப்பதற்கு வழி, அவற்றை அச்சிட்டு வெளியிடுவதே என்பதை உணர்ந்து பல

அரிய நூல்களை மிகத் திருத்தமாக அச்சிட்டு வெளி யிட்டனர். இம் முத்துறையிலும் — உரைநடை எழுதல், உரை எழுதல், நூல் பதிப்பித்தல் — தமக்கு மிக்காரும் ஒப்பாருமில்லாது விளங்கினர். இத் தகைமைகளை நோக்கியே ஒரு பத்திரிகை இவர்களை 'வித்துவ சூடாமணி' என எழுதியது.

இவற்றுக்கு மேலாக நாவலர் அவர்கள் சமூகத் துறையிலும் அரசியல் துறையிலும் சமயத் துறை யிலும் அரும்பணிகள் ஆற்றினர். மக்கள் மத்தியில் காணப்படும் குறைகளை ஒளிப்பு மறைப்பில்லாமல் எடுத்துக்காட்டினர். இதனால்இவர்களுக்கெதிராய்ப் பலத்த சக்திகள் தோன்றின. ஆனால் இவற்றை யெல்லாம் தனித்து நின்று போராடினர்.

இப்படித் தனித்துநின்று போராடியதற்கு இவர்களுக்கு ஆற்றல் எங்கிருந்து வந்ததென்பதை அறிந்தால் இவர்களின் வாழ்க்கையின் உயிர் நாடியை அறிந்தவராவோம். இறைவனுக்குத் தம்மை முழுதும் அர்ப்பணித்தபடியாலேதான் இவர்களுக்கு உலகம் முழுவதும் எதிர்த்து நின்று லும் தனித்து நிற்கக்கூடிய ஆற்றல் கிடைத்தது. காலமுண்டாகவே தமது 'ஆவியையும் உடலையும் உடைமையையும்' இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டார். ஆகவேதான் 'அஞ்சுவதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை' என வாழ்ந்தார்.

இத்தகைய பெரியார் சம்பந்தமான புத்தகக் கண்காட்சியை நடாத்துவதை நாம் பெறுதற்கரிய பேறுகக் கருதுகிறோம்.

இக்காட்சிக்கு நூல்களையும் மற்றும்பொருள்களையும் உதவிய பெருமக்களுக்கு அமைப்பாளர் நன்றி கூறியுள்ளார். புத்தகக்கண்காட்சிக் குழுவினருக்கு—சிறப்பாக திரு. க. சொக்கலிங்கத்துக்கும், திரு. அ. பஞ்சாட்சரத்துக்கும், திரு. கா. மாணிக்கவாசகருக்கும்—எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இம்மூவரும் புத்தகங்களைச் சேகரிப்பதிலும் அவற்றைக் கண்காட்சிக்கு ஒழுங்கு செய்வதிலும் அதிக பிரயாசை எடுத்துள்ளனர்.

நாம் எடுத்த முயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாயிருந்து, நமக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறிய பண்டிதமணியவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூலில் பல அட்டவணைகள் சேர்க்கப்பட்டிருப்பதால் இதை அச்சிடுவதில் சிரமமேற்பட்டிருக்கும். அதைப் பொருட்படுத்தாது செவ்வனே அச்சிட்டுதவிய சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தாருக்கு எமது நன்றியுரித்தாகுக.

'மணிமனை'
மல்லாகம்,
23-6-69.

**ச. அம்பிகைபாகன்**
தலைவர்
(புத்தகக் கண்காட்சிக் குழு)

உ

சிவமயம்

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ
சிவமயம்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை
## புத்தகக் கண்காட்சிக் குழுவின்
# அறிக்கை

**ஆரம்பம் :**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, நாவலர் பெருமானுக்கு அவர் அவதரித்த நல்லூரிலே சிலை எடுத்தல் வேண்டும் எனவும், சிலைநாட்டு வைபவத்தையொட்டிப் பெருவிழா ஒன்றினைக் கொண்டாடல் வேண்டுமெனவும் தீர்மானித்தமை சைவத் தமிழ் மக்களின் பெரும் பாக்கியமேயாகும். இவ்விழாவின் ஓர் அம்சமாக நாவலர் புத்தகக் கண்காட்சி ஒன்றினையும் நடாத்த முடிவு செய்தமை குறிப்பிடத் தக்கது. இதற்கெனச் சபையார் ஒரு புத்தகக் கண்காட்சிக் குழுவையும் நிறுவினர்.

**புத்தகக் கண்காட்சிக் குழுவின் செயற்றிட்டம் :**

நாவலர் புத்தகக் கண்காட்சியில், நாவலர் எழுதிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், உரை எழுதிய நூல்களாகிய வற்றின் முதற்பதிப்புக்களைப் பெரும்பாலும் முயன்று தேடிக் காட்சிக்கு வைத்தல் வேண்டும். முதற்பதிப்புக்கள் கிடைக்காதவிடத்தில் மாத்திரம் மற்றைப் பதிப்புக்களைக் கண்காட்சியில் வைக்கலாம்.

இவற்றோடு நாவலர் பற்றிய நூல்களையும், அவர்தம் சமகாலச் சைவப் பெரியார்களதும், மாணவ பரம்பரையினதும் நூல்களையும் காட்சிக்கு வைத்தல் வேண்டும். இவையே புத்தகக் கண்காட்சிக் குழுவினரின் செயற்றிட்டமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பயன்படுத்தியவையும், படியெடுத்தவையுமான ஏடுகளும் இக்

காட்சியில் இடம்பெறல்வேண்டும் என்ற எண்ணம் பின்னர் ஏற்பட்டது. அதன் பயனாய் அவர்தம் ஏடுகளும் காட்சிக்கு வைக்கப்படுகின்றன. இவ்வகையில் உதவிய திருவாட்டி முத்துக்குமாரு அவர்களுக்கும், அவர் உதவியைப் பெற வழிசெய்த பேராசிரியர் டாக்டர் அ. சின்னத்தம்பி அவர்களுக்கும் எமது குழுவின் சிறப்பான நன்றி உரியதாகுக.

## செயற்பாடுகள் :

புத்தகக் கண்காட்சிக் குழு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே பலகாலுங் கூடி நூல்களைச் சேகரிக்கும் வழி வகைகளையும், அவற்றைக் கண்காட்சியில் வைத்தற்கான ஒழுங்குகளையும் ஆராய்ந்துவந்தது. இது சம்பந்தமாகச் சைவப் பெருமக்களது ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் நாடிப் பத்திரிகைகளிலே அறிக்கைகளும், விண்ணப்பங்களும் விடுத்தோம். நாவலர் பெருமானுடையவும், பிறருடையவும் நூல்களை வைத்திருக்கும் பெரியார்களோடு நேரடித் தொடர்பு கொண்டோம்.

## சிரமங்கள் :

வரலாற்றுணர்வும், முந்தையோரின் செல்வங்களைப் போற்றிப் பாதுகாக்கும் பண்பும் எம்மனோர்க்கு இல்லை எனப் பிறர் குற்றம் சாட்டுவர். இக் குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை உண்டு. இல்லையேல் ஈழத்துச் சைவர்தம் காவற் றெய்வமாய் விளங்கிச் சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க அல்லும் பகலும் அயராதுழைத்த பெருமகனின் கைபடப்பதிக்கப்பட்ட முதற்பதிப்பு நூல்களைப் பெறுவதில், புத்தகக் கண்காட்சிக் குழுவினர்க்கு அதிக சிரமம் நேர்ந்திராது.

எனினும், நாம் எமது முயற்சியிலே தளரவில்லை. புத்தகக் கண்காட்சிக் குழுத் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் பூநகரி, கொழும்பு, யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளாகிய இடங்களுக்கெல்லாஞ் சென்று, பெரியார் பலரைக் கண்டு அவர்களிடமிருந்த நூல்களைச் சேகரித்துள்ளார். அவரின் அயரா முயற்சியினால் நாவலரின் பெரும்பா

லான நூல்கள் புத்தகக் கண்காட்சியிலே இடம்பெறுகின்றன என்பதை, மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

**காட்சியிலே இடம்பெறும் நூல்கள் :**

எமது புத்தகக் கண்காட்சியிலே இடம்பெறவேண்டிய நூல்களென நாம் திட்டமிட்டுச் சேகரித்தவை பின்வரும் பகுதிகளுள் அடங்கும்.

அ. நாவலர் எழுதிய நூல்கள், உரை யாத்த நூல்கள், பரிசோதித்துப் பதித்த நூல்கள்.

ஆ. நாவலர் பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள், மலர்கள், கட்டுரைகள்.

இ. நாவலரின் சமகாலச் சைவப் பெரியார்களான நீர்வேலிச் சங்கர பண்டிதர், இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, இணுவில் அம்பிகைபாக உபாத்தியாயர் முதலியோரின் நூல்கள்.

ஈ. அவர்கள் பரிசோதித்தும், பதிப்பித்தும் வெளியிட்டவை.

உ. நாவலரின் மாணவ பரம்பரையினரான வித்துவ சிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை, ஆறுமுகத் தப்பிரான், காசிவாசி செந்திநாதையர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை, சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர், சபாபதி நாவலர் முதலானோர் எழுதிய, பதிப்பித்த நூல்கள்.

இவை எமக்கும், எம் பரம்பரையினர்க்கும் தரிசன வேதிகள். இவற்றைத் தரிசிக்கக் கிடைத்த கண்கள் பாக்கியம் செய்தவை.

**இனி ஒரு விதிசெய்வோம் :**

இன்று நீங்கள் கண்காட்சியிலே காணும் நூல்களுட் பல நிரந்தரமாக நாவலர் நினைவு மணிமண்டபத்திலே இடம்

பெறப் போகின்றன. நல்லன யாவும் எல்லார்க்கும் பயன் பெற வேண்டியவை என்பதை நினைவு கூர்வோம்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதனை எமது தாரக மந்திரமாகக் கொள்வோம். சைவப் பெரியார்கள், இந் நூல்கள் போன்ற விலைமதித்தற்கரிய செல்வங்களைத் தம்மிடம் வைத்திருப்பார்களாயின் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனக் கருதி அவற்றை நாவலர் நூலகத்திற்கு உபகரிப்பார்களாக. அவை, தம்மைக் காண்கின்ற மக்களைப் புனிதம் செய்வனவாகுக.

**நன்றி:**

நாவலர் புத்தகக் கண்காட்சிக் குழுவினரின் வேண்டுகோளை ஏற்று அதன் முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த பெரியார்கள் பலர். அவர்களுள், நாவலர் நெறிப்படுத்தியும், உருப்படுத்தியும் வந்த சைவநீதி ஈழமணித் திருநாட்டிலே மீண்டும் ஒளிகாணல் வேண்டும் என அல்லும் பகலும் அநவரதமும் கனவுகண்டு வரும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தலையாயவர். நாவலரின் வரலாற்றட்டவணை தயாரிப்பதிலே வழி காட்டியும், நூற்கண்காட்சி சிறப்புற அரிய ஆலோசனைகள் வழங்கியும் அவர் ஆற்றிய பணியை நாவலர் புத்தகக் கண்காட்சிக் குழு நன்றியுடன் நினைவு கூர்கிறது.

தொடக்க நிலையில் இவ்வட்டவணையைத் தயாரித்தளித்த நண்பர்கள் 'சம்பந்தன்', 'சேந்தன்' ஆகியோரும், இறுதி நிலையில் அதனை அழகுறத் தயாரித்து எழுதியுதவிய சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்களும் எமது பெருநன்றிக்குரியர். நாவலர் அவர்கள் உபயோகித்த ஏடுகளைக் காட்சிக்கு வைப்பதற்குக் குழு விரும்பியது. குழுவின் விருப்பத்தையறிந்த பண்டிதர் ஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள் அந்த ஏடுகளையெல்லாம் ஆராய்ந்து வேண்டிய விளக்கக் குறிப்புக்களையும் எழுதி உதவினார்கள். அவர்களுக்கும் குழுவின் விசேட நன்றி.

பின்வரும் பெரியார்கள் புத்தகக் கண்காட்சிக்கு நூல்களை உபகரித்தும், தகுந்த ஆலோசனைகளை வழங்கியும் உதவினர்:

திரு. கு. அருளம்பலம் அவர்கள்
(இளைப்பாறிய உடையார்) பொன்னுவெளி, பூநகரி.

திரு. நா. அருளம்பலம் அவர்கள்
(முன்னாட் கோப்பாய் கிராமசங்கத் தலைவர்).

திரு. வை. கதிர்காமநாதன் அவர்கள்
(அம்பிகைபாக உபாத்தியாயரின் பேரன்) இணுவில்.

திரு. பெ. கணநாதபிள்ளை அவர்கள், B. A., கொழும்பு.

பேராசிரியர், டாக்டர் அ. சின்னத்தம்பி அவர்கள், கொழும்பு

திருவாட்டி ஞானப்பூங்கோதை முத்துக்குமாரு அவர்கள்,
கைலாய பிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

திருவாட்டி மகேசுவரி நவரத்தினம் அவர்கள்
பி. ஏ. தம்பி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பிரமஸ்ரீ ச. பஞ்சாட்சர சர்மா அவர்கள், கோப்பாய்.

திரு. கு. அம்பலவாணபிள்ளை அவர்கள்,
'புலவரகம்', சுன்னாகம்.

திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், B. A.,
'புலவரகம்', சுன்னாகம்.

திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள், 'பத்மாலயம்',
உரும்பராய்.

திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள், B. A., 'மணிமனை',
மல்லாகம்.

திரு. மு. இராமலிங்கம் அவர்கள், வட்டுக்கோட்டை,
அதிபர், யாழ்–மத்திய கல்லூரி.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
இராமநாதன் அக்கடமி, சுன்னாகம்.

கைம்மாறு கருதாதுதவிய இப் பெருந்தகையாளர்க்கு எமது குழுவினதும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினதும் நன்றி மாத்திரமன்றி, ஈழத்துச் சைவத் தமிழ்மக்களின் பெருநன்றியும், வாழ்த்துக்களும் என்றும் உரியனவாகும்.

**க. சொக்கலிங்கம்**
அமைப்பாளர்
நாவலர் புத்தகக் கண்காட்சிக் குழு

24–6–69.

# வித்வ சூடாமணி

(‘தத்துவ விசாரணை’ப் பத்திராதிபர்)

**நா**ம் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைச் சுட்டி சென்னை முதல் ஈழம் ஈறாக உள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர் என்று உரைத்ததை மனம் பொறாத நீவிர், ஈழம் தமிழ்நாட்டெல்லை யாகுமோ என்று வேடதாரி போல ஆசிரியம் செய்கின்றீர். ஸ்ரீ நாவலரவர்கள் ஜீவந்தராயிருந்த காலத்திலேயிருந்த தமிழ் நாட்டுப் பிரபுக்களுள்ளே தமிழ்ப் புலமையும், தமிழ்ப் புலவர்களுக்கு உபகரிப்பும், ஔதாரியமும் ஒருங்குடையவர் ஸ்ரீ இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவரன்றோ. இவர் தமிழிலக்கியங்களிலே மிகச் சிறந்தனவாகிய திருக்கோவையார், திருவள்ளுவர் முதலிய நூல்களை அவற்றின் உரைகளோடு பிழையறப் பரிசோதித்து அச்சிட யாரைத் தேடினர்? தற்காலம் தமிழ் வளர்கைக்கு மாதுருஸ்தானராகிய திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீ சற்குருநாத தேசிக சுவாமிகள் தமது ஆதீனத்திற்றோன்றிய மகா கடின கிரந்தங்களாகிய ‘‘இலக்கணக் கொத்துரை’’, ‘‘தொல்காப்பியச் சூத்திரவிருத்தி’’, ‘‘இலக்கண விளக்கச் சூறாவளி’’ என்னும் மூன்றனையும் பரிசோதித்து அச்சிடத் தக்க வித்துவான் ஸ்ரீ நாவலர் அவர்களே யென்றன்றோ அவரைத் தேடி அங்ஙனஞ் செய்வித்தார். இவர்கள் ஏன் தாங்களே அந்நூற்களைத் திருத்தி வெளியிடப்படாது. இந்த இந்து தேசத்துத் தமிழ் வித்துவான்களாலும் உமது இராமலிங்க பிள்ளையாலும் புகழ்ந்து பேசப்பட்ட வித்துவத் திறத்தினையுடைய திருவாவடுதுறை, திருவண்ணாமலை, மதுரை ஆதீனப் பண்டார சந்நிதிகள் தங்கள் தங்கள் மடாலயங்களிலும் மதுரைச் சிவாலயத்திலும் நாவலரவர்களைக் கொண்டு வெகுசன சமூகத்திலே பிரசங்கஞ் செய்வித்து அவர்களை உபசரித்தருளிய வரிசைகளெல்லாம் நுஞ் செவியின் முழக்கினுர் ஒருவரும் இல்லைப்போலும். இத்தகைய வரிசைகளையும், சின்னங்களையும், கீர்த்தியையும் இத் தமிழ்நாட்டு வித்துவான்களாலேயே கொடுக்கப்பெற்ற உயர் ஒப்பில்லாத அதுல்ய வித்வசூடாமணியைப் புறங்கூறல் அழகன்று. அழகன்று.

# நாவலர் பாலபாடங்கள்

[சென்னையில் நடைபெற்ற 'Native Public Opinion' என்னும் ஆங்கிலப் பத்திரிகையிலிருந் தெடுத்து 1872ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆந் திகதி வெளிவந்த 'இலங்காபிமானி'' என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.]

தமிழ் முதலாஞ் சுதேச பாஷைகள் குன்றத் தலைப்பட் டுள்ள இக்காலத்திலே, பாண்டிய மன்னர் காலத்திருந்த பழைய புலவர்கள் வித்துவான்களை யொத்த சிலர் இக் காலத்திலும் விளங்குதல் ஒரு பெரும் ஆறுதலாகும். சிலர் என இங்கு யாரும் குறித்தவருட் பிரதானமானவர்கள் மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்னும் இருவருமாவர். இவ்விருவருள் பிள்ளை யவர்கள் சிறந்த புலவராவர். இவர் பாடிய நூல்கள் பல. நாவலரவர்கள் இக்காலத்திற் கிசைந்த சிறந்த தமிழ்வசன நடை இயற்றுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். இவருக்கு முன்னிருந்த அறிஞர்களும் இப்படி யான தமிழ் வசனம் எழுதமாட்டார்கள்.

இனி, வாக்கு வன்மையோடு பிரசங்கஞ் செய்வதிலும் இந் நாவலருக்கு நிகரானவர் எவருமில்லை. இவரைப்போல் இதற்கு முன்னர் உபந்நியாசஞ் செய்தாரை யாம் கேட்ட தில்லை. மேலும் இப் பெரியார் ஏட்டுப் பிரதிகளாயிருந்த எத்தனையோ அரிய தமிழ் நூல்களைப் பிழையறப் பரிசீலனை செய்து அச்சிட்டு வெளியிட்டு வருகின்றூர். கேவல நிலைமை யடைந்துள்ள தமிழ்மொழி இப் பெரியார் செய்துவரும் இப்படியான அரும்பெரு முயற்சிகளினுல் விருத்தியாதல் முடியும்.

நாவலரவர்கள் தாம் எழுதிய முதன் மூன்று வகுப்புகட் குரிய பாலபாடங்களை அபிப்பிராயம் பெறும்படி எமக்கு அனுப்பியிருக்கிறுர். அவருடைய தமிழ் வசனநடையைப் பற்றி நாம் ஏதும் கூறப்புகுதல் மிகையாகும். பாலபாடங்

களை எழுதவேண்டிய முறையிலேயே எழுதியுள்ளார். இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத் தவருது இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்வோம். இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்ருனும் சிறந்தவையாகும். வித்தியா சங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம். இனி, நாவலர் பாலபாடங்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் அரிய விஷயங்கள் சாலச் சிறந்தவையாகும். அவர் எழுதிய முதலாம் இரண்டாம் பாலபாடங்கள் இங்குள்ள தமிழ் வித்தியா சாலைகள் எல்லாவற்றிலும் அந்த அந்த வகுப்புக்களில் தவருது உபயோகிக்கப்படல் வேண்டும். அவர் எழுதிய மூன்ரும் பாலபாடம் (இது இக்காலத்தில் நான்காம் பால பாடமாக வழங்குகின்றது — பத்திராசிரியர்) எங்கள் தாலுகாக்களிலுள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கில வித்தியாசாலைகளிலும் மேல்வகுப்புக்களில் உபயோகிக்கற் பாலது.

நாவலர் எழுதிய பாலபாடங்கள் மூலமாக அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருவோர் இந்நாட்டு மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் அறித லாகும். ஆனுல், இங்குள்ள பாதிரிமாருக்கு இப் புத்த கங்கள் மாருனவை போலத் தோன்றுமென்பதை நாம் அறிவோம். பிறமதத்தையேனும் மதத்தினரையேனும் இப் புத்தகங்களில் நாவலர் கண்டித்து எழுதிஞரல்லர். சில உண்மைகளையே உள்ளபடி அப் பெரியார் எழுதியுள் ளார். இப்படியான பாடங்களிஞல் நன்மையன்றி வரக் கூடிய தீமை யாதுமில்லையெனலாம். இந்த நியாயம் பற்றி இந்திய அரசினரும் இலங்கை அரசினரும் நாவலரவர்க ளுடைய புத்தகங்களையே வித்தியாசாலைகளில் உபயோ கிக்கச் செய்து, இன்னமும் இப்படியான அரிய நூல்களை எழுதும் வண்ணம் அப் பெரியார்க்கு ஊக்கமளிப்பரெனக் காத்திருக்கிருேம்.

# நாவலர் நடைப்பாங்கு

உரைநடை நூல்கள் எழும்வண்ணம் கடனாற்றி வந்த புலவர் பெருமக்கள் தாங்கள் தாங்கள் கண்ட புதுமைகளையே உரைநடைகளில் வைத்து அளித்தார்களேயன்றி, நம் மூதாதைகளான சான்றோர்கள் தங்கள் வாழ்நாட்களில் ஈட்டிவைத்த செம்பொருட்களின் முடிபுகளான உறுதிபயக்கும் கருத்துக்களைத் தங்கள் உரைநடை வாயிலாகத் தந்தார்களில்லை. இக்குறைபாட்டால் தமிழ் நாடடைந்த முட்டுப்பாட்டைச் சமன் செய்வதற்கு வசனநடை கைவந்த வல்லாளர்களாகிய முனிவர்களது வரவு வேண்டப்படுவதாயிற்று. முன்னைப் பழைமையின் பழைமையையும் பின்னைப் புதுமையின் புதுமையையும் இயங்கும் செந்தமிழ்த் திருமொழிக்கு உரைநடை நூல்கள் இயற்றி உதவும் அறவோர்களின் வரவை எதிர் நோக்கித் தவங்கிடந்த தமிழ்நாட்டில் 1822ஆம் ஆண்டு ஓர் தவமுதல்வர் தோன்றினார்கள். தமிழ் மொழியின் நிலைகண்டுணர்ந்த புலமையும் அளவைத் திறனும் ஆன்றமைந்த கூர்ந்த மதியும் தேன்கடல் மடைதிறந்தாலன்ன சொற்பொழிவாற்றும் வன்மையும் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் தனக்கென வாழாத் தகைமையும் சிவனடியை மறவாத சிந்தனையும் தவக்கோலமும் விளங்கத் தோன்றிய இத் தவமுதல்வரே ஆறுமுகநாவலர் அவர்கள். இவர்கள் கற்பன கற்றுச் செந்தமிழில் அடிமுதல் முடிவரை நெடிது பயின்று சைவ

சித்தாந்தப் பெருநூல்கள் அத்தனையையும் ஆராய்ந்து உலக நிலையாமையையும் உயிர்கள் வாழும் வாழ்க்கையின் புன்மையையும் கண்டு அவற்றை வெறுத்துத் தவமுனிவர்களாய் வெளி வந்தார்கள். வெளிவந்த இப்பெரியாரின் திரு வுள்ளம் சைவத்திலும் தமிழிலும் திரும்பிற்று. கடலமுது கடைந்து கரையில் வைத்ததுபோல் பல நூல்களையும் துருவி உணர்ந்து புலமை முற்றிய இப்பெரியாரை உரைநடை நூல் வகுத்தளிக்குமாறு தமிழன்னை வேண்டிநின்றாள்.


உறுதிபயக்கும் சமய நூன்முடிபுகள் யாவும் பாட்டுக்களிலேயே அடைபட்டுக் கிடத்தலையும் அவற்றின்மீது தமிழ்மக்கள் நாட்டம் செல்லாமை யையும் கண்ட இவர்கள் உரைநடை நூல்கள் இயற்றத் தொடங்கினார்கள்.

— சி. சரவணனார்

* * *

**யா**ழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் தமது சைவப்பிரகாச வித்தியாசாலைகளின் பொருட்டுப் பிரசுரஞ்செய்த பாலபாடங்கள் செந் தமிழ்நடையிலே செவ்விதின் எழுதப்பெற்றவை. இவைகளில், நான்காவது பாலபாடம் செம்பாக மான உரைநடையிற் பயில விரும்பும் தற்கால மாணவர்க்கு நல்ல நடைவண்டியாக இராநின்றது. தோரணியாகச் சரித்திரம், கதை முதலியன எழுது வதற்கான நடை பயில வேண்டுவார்க்கு நாவல ருடைய பெரியபுராண வசனம், வழிகாட்டியாக இரா நின்றது.

— தி. செல்வக்கேசவமுதலியார், எம். ஏ.



ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் உபயோகித்த பட்டுப் பீதாம்பரம், உருத்திராக்க மாலைகள், பூக்கூடை முதலியவற்றை இப் படத்திற் பார்க்கலாம்.

## நாவலரைப்போல நமக்காளில்லை

"நாவலர் 'பச்சைப்படி'யாகச் சொல்லு கிறவர். ஒளித்து மறைத்துச் சொல்லத் தெரியாத வர்; 'குத்த'லாகக் 'கிண்ட'லாகக் 'குறிப்'பாகச் சொல்லத் தெரியாதவர்; 'பூசி' 'மெழுகிச்' சொல்லத் தெரியாதவர்; இந்தக்காலத்து நாகரிக புருடர்களைப்போல.

'பச்சைப்படி'யாகச் சொன்னாலும் சொற்கள் ஊடுருவிப் பாய்வன. குற்றவாளியைக் கொதிக்கச் செய்வன. சத்திர வைத்தியம் செய்து திருத்தம் விளைப்பன. இரக்கத்திலே பிறந்த சொற்கள். தம்மவர் பிறர் என்று பாரபட்சம் பாராத சொற்கள். அதனால் யாரையும் கிடுகிடுத்து நடுங்கச் செய்த சொற்கள். யாவருக்கும் திருத்தம் விளைத்த சொற்கள்.

நாவலரைப்போல நமக்காளில்லை. முற்போக்குப் பேச நமக்காட்களுண்டு. சமரசம்பேச நமக்காட்க ளுண்டு. தேசீயக் கிறிஸ்தவர்களுண்டு. பாதிரி செய்த நன்மையை நோக்கி உருகுவோருண்டு. இக்காலப் போலி நடிப்பை எடுத்துக்காட்ட நமக்காளில்லை. நாவலரைப்போல நமக்காளில்லை.

யாழ்ப்பாணச் சமய நிலையைச் சிலர் சிந்திக் கட்டும்; இக்காலப் போலி நடிப்பைக் கூர்ந்து பார்க்கட்டும்; போலியைக் கெடுக்கவும் உண்மையை நிறுத்தவும் சிலர் துடிக்கட்டும்."

— பொ கைலாசபதி, பி. எஸ்ஸி.

# தமிழ்ப் புத்தகங்கள்

[நாவலர் அவர்களால் எழுதப்பட்டு 1860இல் வெளிவந்த 'திருக்கோவையார்' பதிப்பில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டது.]

முற்காலத்தில் உள்ள மகிமை பொருந்திய புலவர்களாலே தமிழிற் செய்யப்பட்ட நூல்களுள்ளும் உரைகளுள்ளும் அளவில்லாதவைகள், அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமையால், இறந்து போயின. இறவாது இக்காலத்தில் எஞ்சியிருப்பவைகளும் கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு பிழைபட்டனவாய், சில விடங்களில் மாத்திரம் அருகி வழங்குகின்றன. அவைகளுள் யாதாயினும் ஒன்றைக் கற்க விரும்புவோர் அது இருக்கும் இடம் ஆராய்ந்தறிதல் அரிது. நெடு நாளாகச் செய்த பெருமுயற்சியினுலே பெற்ருலும், எழுதவல்லார் கிடைத்தல் அரிது; கிடைத்தாலும் எழுத்துக்கூலி மிகப் பெரிதாதலால் எழுதுவித்துக் கொள்ளுதல் அரிது. எழுதுவித்துக்கொண்டாலும், ஒத்துப்பார்வையிட்டுக்கொள்ளுதல் அரிது. ஒத்துப் பார்வையிட்டுக் கொண்டாலும், கற்கும்போது பிழையற ஓதுதலும் பொருள்துணிதலும் கூடாமையால் விளையும் வருத்தம் மிகப்பெரிது. ஒரு நூலைக் கற்றற்கே இப்படிக் காலநீட்டமும், பெருமுயற்சியும், பொருட்செலவும், வருத்தமும் உளவாயின் சில வாழ்நாளையும் அதற்குள்ளே பல பிணிகளும் கவலைகளையுமுடைய சிற்றறிவினராகிய மனிதர்கள் சிலகாலத்திலே பல நூல்களைக் கற்று வல்லராதல்

எப்படி? இதனாலன்றோ, நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியிலே விருப்பமும் முயற்சியும் வர வரக் குறைகின்றன. இவ்வேதுவினால், இப்பொழுது எஞ்சியிருக்கும் நூல்களும் விரைவின் இறந்துவிடு மென்பதற்கு ஐயமில்லை. ஆதலால், யாவருக்கும் எளிதிற் பயன்படும்பொருட்டு முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட்ட பல பிரதிகளைக்கொண்டு ஒருவாறு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்யவேண்டும்.

செய்யுள் வடிவாகிய நூல்களும் அவைகளின் உரைகளும் கற்றுவல்லவர் சிலருக்கன்றி மற்றவர் களுக்குப் பயன்படாவாம். ஆதலால், விவேக மில்லாதவர்களுக்கும், விவேகமுள்ளவர்களுள்ளும், இங்கிலிசு பாஷையைக் கற்றலிலும் லௌகியங் களைச் செய்தலிலும் தங்காலத்தைப் பெரும் பான்மையும் போக்குகிறவர்களுக்கும், பெண் களுக்கும் பயன்படும் பொருட்டு, நீதி நூல் களையும் சரித்திரங்களையும் சமய நூல்களையும் லௌகிக நூல்களையும் வெளிப்படையாகிய வசன நடையிற் செய்து அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தல் வேண்டும். கல்விப் பொருளோடு செல் வப் பொருளும் ஒருங்குடைய மகிமை பொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ் நாட் டிலும் தமிழ்ப் பாஷையிலும் அபிமானமுடைய வர்களாகி தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்து இம் முயற்சிகளை நிறைவேற்றுவார்க ளாயின், நமது நாட்டிலே எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி வளர்ந்தோங்குமே.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நூல்கள்

## நாவலர் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் :

1. முதற் பாலபாடம்
2. இரண்டாம் பாலபாடம்
3. நான்காம் பாலபாடம்
4. பெரியபுராண வசனம்
5. சிவாலய தரிசன விதி
6. சைவதூஷண பரிகாரம், சுப்பிரபோதம்
7. சைவ வினுவிடை — முதற் புத்தகம்
8. சைவ வினுவிடை — இரண்டாம் புத்தகம்
9. இலக்கணச் சுருக்கம்
10. சிதம்பர மான்மியம்
11. கந்தபுராண வசனம் (அசுரகாண்டம் வரையில்; மிகுதி வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை எழுதியது).
12. அநுட்டான விதி (நித்திய கரும விதி)—முதற் புத்தகம்
13. அநுட்டான விதி – இரண்டாம் புத்தகம்
14. யாழ்ப்பாணச் சமய நிலை
15. இலங்கைப் பூமிசாத்திரம்
16. திருவிளையாடற் புராண வசனம் (நாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுத் திரு. த. கைலாசபிள்ளை அவர்களால் பூர்த்தியாக்கப்பட்டது).
17. இலக்கண வினுவிடை — முதற் புத்தகம்
13. இலக்கண வினுவிடை — இரண்டாம் புத்தகம்
19. நல்லூர்க் கந்தசுவாமிகோயில் — முதற் புத்தகம்
20, நல்லூர்க் கந்தசுவாமிகோயில் இரண்டாம் புத்தகம்
21. பெரியபுராண சூசனம்

22. போலி அருட்பா மறுப்பு
23. மித்தியாவாத நிரசனம்
24. புலோலி பசுபதீச்சரப் பெருமான் திருவூஞ்சல்
25. கதிர்காம சுவாமிமீது கீர்த்தனங்கள்
26. தனிப் பாமாலைகள்

**நாவலர் அவர்கள் உரை எழுதி வெளியிட்ட நூல்கள் :**

1. திருமுருகாற்றுப்படை
2. கோயிற்புராணம்
3. சைவசமய நெறி
4. ஆத்திசூடி
5. கொன்றைவேந்தன்
6. வாக்குண்டாம்
7. நன்னெறி
8. நல்வழி

**நாவலர் அவர்கள் பரிசோதித்துப் பதிப்பித்த நூல்கள் :**

1. சூடாமணி நிகண்டு — உரையுடன்
2. சௌந்தரிய லகரி — உரையுடன்
3. நன்னூல் விருத்தியுரை
4. திருச்செந்தினிரோட்ட யமகவந்தாதி
5. குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
6. கந்தரலங்காரம்
7. கந்தரநுபூதி
8. ஏரெழுபது
9. திருக்கை வழக்கம்
10. மறைசையந்தாதி
11. கோயிற்புராணம் மூலம்
12. திருக்கருவைப்பத்தந்தாதி
13. சிதம்பர மும்மணிக்கோவை

14. பட்டணத்துப் பிள்ளையார் பாடல்
15. அருணகிரிநாதர் வகுப்பு
16. மருதூரந்தாதியுரை
17. திருச்செந்தூரகவல்
18. விநாயகரகவல்
19. விநாயக கவசம்
20. சிவகவசம்
21. திருவள்ளுவர் — பரிமேலழகருரை
22. திருச்சிற்றம்பலக்கோவையுரை
23. சேதுபுராணம்
24. பிரயோக விவேக மூலமுமுரையும்
25. தருக்க சங்கிரகம்
26. உபமான சங்கிரகம்
27. இரத்தினச் சுருக்கம்
28. இலக்கணக்கொத்து
29. தொல்காப்பியச் சூத்திர விருத்தி
30. இலக்கண விளக்கச் சூறாவளி
31. கந்தபுராணம்
32. பதினோராந் திருமுறை
33. நாவலர் நான்மணிமாலை, பெரியநாயகி விருத்தம், பெரியநாயகி கலித்துறை, புஷ்டான நவமணிமாலை.
34. தொல்காப்பியம்—சொல்லதிகாரம், சேனாவரையருரை
35. சிதம்பர மான்மியம்
36. சிவஞானபோதச் சிற்றுரை
37. பெரியபுராணம்
38. புட்பவிதி
39. உபநிடத மூலமும் உரையும்.

# ஸ்ரீலஸ்ரீ
# நாவலரவர்கள் நூல்வெளியீட்டுப்பணி

### காலக் கிரமப்படி

[ இவ்வட்டவணை, கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய 'ஆறுமுக நாவலர் சரித்திர'த்தைத் தழுவித் தயாரிக்கப்பட்டது. ]

*1849*—சௌமியஸ்ரீ : சூடாமணி நிகண்டு.
சௌந்தரிய லகரி — உரையுடன்.

*1850*—சாதாரணஸ்ரீ : முதலாம், இரண்டாம் பால பாடங்களை எழுதி வெளியிடல்.

*1851*—விரோதிகிருதஸ்ரீ : நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரை, நன்னூல் சிவஞான சுவாமிகள் விருத்தியுரை, திருச் செந்தினிரோட்ட யமகவந்தாதி — இவற்றைப் பரிசோதித்து வெளியிடல், திருமுருகாற்றுப்படைக்குத் தாம் எழுதிய உரையோடு வெளியிடல்.

*1852*—பாதாபிஸ்ரீ : பெரியபுராணவசனம் எழுதி வெளியிடுதல், முத்துக்குமார கவிராயரின் ஞானக்கும்மி முதலியவற்றை வெளியிடல்.

*1854*—ஆனந்தஸ்ரீ : சைவதூஷண பரிகாரம் வெளியிடல்.

*1860*—சித்தார்த்திஸ்ரீ : திருக்கோவையார் மூலம், திருவாசகம் மூலம் என்பனவற்றைச் சென்னையிலிருந்து பதிப்பித்து வெளியிடல்.

| | |
|---|---|
| 1861—ரௌத்திரிஸ்ரீ : | திருக்குறள்-பரிமேலழகர் உரையை வெளியிடல். |
| 1862—துன்மதிஸ்ரீ : | திருக்கோவையார், நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிடல். |
| 1864—இரத்தாக்ஷிஸ்ரீ : | நான்காம் பாலபாடத்தை எழுதி வெளியிடுதல்; பெரியபுராண சூசனம், கந்தபுராணவசனம், திருவிளையாடற்புராண வசனம் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்குதல்—இவை அவர்கள் காலத்தில் பூர்த்தியாகவில்லை. |
| 1866—அட்சயஸ்ரீ : | சேதுபுராணம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறுவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, பிரயோகவிவேகம்—மூலமும் உரையும் என்பவற்றை வெளியிடல். |
| 1867—பிரபவஸ்ரீ : | கோயிற்புராணத்திற்குப் புத்துரை எழுதி வெளியிடுதல். |
| 1868—விபவஸ்ரீ : | சைவசமய நெறிக்குப் புத்துரை எழுதி வெளியிடுதல். பாரதம், கொலைமறுத்தல், வைராக்கியதீபம், வைராக்கியசதகம், திருவுந்தியார், தாயுமானவர் பாடல் முதலியவற்றைத் தம்முன்னிலையில் சதாசிவப் பிள்ளையைக் கொண்டு பரிசோதித்து வெளியிடல். |
| 1869—சுக்கிலஸ்ரீ : | போலியருட்பா மறுப்பு எழுதி வெளியிடுதல். |
| 1872—ஆங்கீரசஸ்ரீ : | யாழ்ப்பாணச் சமய நிலையை வெளியிடல். |

1873—ஸ்ரீமுகஞூ: இரண்டாம் சைவ விஞவிடை, இலக்கணச் சுருக்கம் முதலிய வற்றைப் புதிதாகச் செய்தல்.

1874—பவஞூ: இலங்கைப் பூமிசாஸ்திரம் வெளி யிடல்.

1875—யுவஞூ: நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முதற் புத்தகம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாம் புத்தகம்.

பெரியபுராணமும் திருவிளையாடற் புராணமும் நாவலர் அவர்கள் மறைவுக்குப் பின்னரே வெளியிடப்பட்டதாக அறியக்கிடக்கிறது. நாவலர் அவர்கள் பரிசோதித்து வைத்த பிரதிகளைக் கொண்டு, திரு. சதாசிவப்பிள்ளை அவர்கள் பெரிய புராணத்தை 1884ஆம் ஆண்டிலும், திருவிளையாடற் புராணத்தை 1907ஆம் ஆண்டிலும் பதிப் பித்ததாகத் தெரிகிறது.

---

''அடுத்த யுவ தாது, ஈசுர வெகுதானிய வருஷங்களிலே நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளையாடற் புராணம், நன்னூற் காண்டிகையுரை முதலிய நூல்களைத் திருத்துவதிலும், சிவபூசாவிதி, மூன்ரும் அனுட்டானவிதி, குருசிஷ்யக் கிரமம், பூசைக்கிடம்பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பணவிதி, போசனவிதி, தமிழ் அகராதி, தமிழ்-இங்கிலிஷ் அகராதி முதலிய நூல்களைப் புதிதாய் எழுது வதிலும், சைவப் பிரசங்கங்கள் செய்தலிலும் தங் காலத்தைப் போக்கினர்.''

**ஆறுமுகநாவலர் சரித்திரம் - 1966**
**வே. கனகரத்தின உபாத்தியாயர் (பக் 112.)**

மேலே கூறப்பட்ட பந்தியினை நோக்குகையில் நாவலர் பெருமான் ஆராய்ந்து வெளியிட விருந்த நூல்கள் பலவாய் இருந்தன என்பது தெரிகின்றது. இதுபற்றி அறிஞர்கள் ஆராயவேண்டுவது கடனுகும்.

# இனி அச்சிற் பதிப்பிக்கப்படும் புத்தகங்கள்

இறையனு ரகப்பொருளுரை
தொல்காப்பியம்
இளம்பூரணருரை
,, சேனுவரையருரை
,, நச்சினர்க்கினியருரை
,, சூத்திரவிருத்தி
பிரயோக விவேகவுரை
இலக்கணவிளக்கச் சூருவளி
அகப்பொருள் விளக்கவுரை
புறப்பொருளுரை
யாப்பருங்கலவுரை
நவநீதப் பாட்டியலுரை
சிதம்பரப் பாட்டியல்
பிரபந்த தீபம்
வீரசோழியவுரை
நேமிநாதவுரை

---

கந்தபுராணம்
உபதேசகாண்டம்
கூர்மபுராணம்
காசிகாண்டம்
வாயு சங்கிதை
சேதுபுராணம்
அருணகிரிப்புராணம்
காஞ்சிப்புராணம்
விநாயக புராணம்
திருத்தணிகைப் புராணம்
வேதாரணிய புராணம்
சிவராத்திரி புராணம்

---

திருப்புகலூரந்தாதியுரை
பழமலையந்தாதியுரை
புலியூர்யமகவந்தாதியுரை
மருதூர்யமகவந்தாதியுரை
இரகுவமிசம்
வில்லிபுத்தூராழ்வார்
பாரதம்

---

பதினேராந் திருமுறை
குமரகுருபரசுவாமிகள்
பிரபந்தத்திரட்டு
சிவஞானசுவாமிகள்
பிரபந்தத்திரட்டு
கச்சியப்பசுவாமிகள்
பிரபந்தத்திரட்டு

---

சிவராத்திரி கற்பம்
சோமவார கற்பம்
உருத்திராக்க விசிட்டம்
ஆசௌசதீபிகை
பிராயச்சித்த சமுச்சயம்
பரமததிமிரபானு

| | |
|---|---|
| சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் | கலித்தொகையுரை |
| | அருங்கலச் செப்புரை |
| சிவதத்துவ விவேகம் | நான்மணிக்கடிகையுரை |
| ——— | சிறுபஞ்சமூலவுரை |
| கல்லாடவுரை | அறநெறிச் சாரவுரை |
| சீவகசிந்தாமணியுரை | பழமொழியுரை |
| சிலப்பதிகாரவுரை | கார்நாற்பதுரை |
| மணிமேகலை | களவழிநாற்பதுரை |
| வளையாபதி | புறநானூறுரை |

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பரிசோதித்து ரௌத்திரிஸ்ரீ (1862) ஐப்பசி மாதத்தில் வெளிப்படுத்திய திருக்கோவையார் நூலிற் காணப்பட்ட பிரகடனப் பத்திரிகை. பல்வேறு சமயச் சார்புடைய இலக்கியங்களையும் அச்சிற் பதிப்பிக்க ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் திட்டமிட்டிருந்தாரென்பதை இப்பிரகடனத்திலிருந்து அறியலாம்.

உ

புத்தகக் கண்காட்சியில் வைக்கப்படும்

# நாவலர் அவர்கள் சமகாலத்தவர், மாணவர் நூல்கள்

**சி. வை. தாமோதரம்பிள்ளை**

வீரசோழியம்
இறையனார் அகப்பொருள்
இலக்கணவிளக்கம்
சூளாமணி
தணிகைப் புராணம்
கலித்தொகை
தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
நச்சினார்க்கினியர் உரை
,, பொருளதிகாரம் சொல்லதிகாரம் உரை
நீதிநெறி விளக்கம்

**சங்கரபண்டிதர்**

சைவநூற் சங்கிரகம்
கிறிஸ்துமத கண்டனம்
சற்பிரசங்கம்
மிலேச்சமத விகற்பம்
சைவப்பிரகாசனம்

**வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை**

பாரதம் — ஆதிபர்வம் — பொன்னம்பலபிள்ளை உரை
,, ,, வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை
வ. குமாரசுவாமிப்புலவர்
இரகுவம்சம்

**ஆறுமுகத்தம்பிரான்**

பெரியபுராண உரை—மூன்று தொகுதிகள்

**காசிவாசி செந்திநாதையர்**

தத்துவ விளக்கம்
தேவாரம் வேதசாரம்
சைவவேதாந்தம்
சைவ சித்தாந்தம்
சிவஞானபோத வசனாலங்கார தீபம்
நீலகண்ட பாஷியம்

**த. கைலாசபிள்ளை**

சதுர்வேத தாற்பரிய சங்கிரகம்
முத்திராலக்ஷணம்
சிவகீதை (பரிசோதித்தவர்)
கட்டுரைத் தொகுதி
பதிபசுபாச விளக்கம்
இரண்டாம் பாலபாடம்

**சபாபதிநாவலர்**

யேசுமத சங்கற்ப வியாகரணம்
சபாபதி நாவலர் சரித்திரம்
சிதம்பர சபாநாத புராணம்
இலக்கணவிளக்கப் பதிப்புரை மறுப்பு

**ம. க. வேற்பிள்ளைஉபாத்தியாயர்**

திருவாதவூரடிகள் புராணம் உரை
அபிராமி அந்தாதி உரையுடன்
ஈழமண்டல சதகம்

**அ. குமாரசுவாமிப்புலவர்**

தண்டியலங்காரம் — மூலமும் உரையும்
யாப்பருங்கலக் காரிகை
குமாரசுவாமிப்புலவர் சரித்திரம்
,, சரித்திரச் சுருக்கம்
கண்ணகி காதை
இராமோதந்தம்
மாவை இரட்டைமணிமாலை

வினைப்பகுபத விளக்கம்
இலக்கண சந்திரிகை
மறைசையந்தாதி உரை
சூடாமணி நிகண்டு உரை
சதாசாரக் கவித்திரட்டு
சிசுபால சரிதம்
அகப்பொருள் விளக்கம்
மேகதூதக்காரிகை
கைலாசபிள்ளையார் ஊஞ்சல்
புலவர் நினைவுகள்

**சு. ஏரம்பையர்**

நீதிசார மொழிபெயர்ப்பு—மூலமும் பொழிப்புரையும்
சிவசிராத்தவிதி

**சுவாமிநாதபண்டிதர்**

வடமொழிச் சிவஞான போதத்து
முதற் சூத்திர வியாக்கியானம்

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பரிசோதித்த நூல்**

கல்லாடம்
சூதசங்கிதை

**சிவப்பிரகாச பண்டிதர்**

தமிழ் — ஆரும் புத்தகம்

**சின்னத்தம்பிப் புலவர்**

மறைசையந்தாதி

**சபாபதி ஐயர்**

செகராசசேகரமாலை — மூலமும் உரையும்

**சேர் பொன்னம்பலம் இராமநாதன்**

திருக்குறட் பாயிரமும் இராமநாதீயமும்
ஆத்திசூடி மந்திர விளக்கம்

**இணுவில் இ. அம்பிகைபாக உபாத்தியாயர்**

தணிகைப் புராணம் — உரை

வசன சூளாமணி

**முத்துக்குமார கவிராயர்**

ஞானக் கும்மி

முத்துக்குமார கவிராயர் பிரபந்தத்திரட்டு

## நாவலரைப்பற்றிய நூல்கள்

ஆறுமுகநாவலர் சரித்திரம்

**வே. கனகரத்தின உபாத்தியாயர்**

ஆறுமுகநாவலர் சரித்திரம் — **த. கைலாசபிள்ளை**

ஆறுமுகநாவலர் சரித்திரம் (செய்யுள்)

**சேற்றூர் அருணசலக் கவிராயர்**

நாவலர் பெருமான் — **சுத்தானந்த பாரதியார்**

நாவலர் பெருமான் — **நா. மாயாண்டி பாரதி**

நாவலர் சற்குரு மணிமாலை — **அம்பலவாண நாவலர்**

நாவலர் பற்றிய கட்டுரைகள்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

தமிழ்ப் புலவர் சரித்திரம் — **அ. குமாரசுவாமிப்புலவர்**

ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்

**வித்துவசிரோமணி சி. கணேசையர்**

நாவலர் சமயப்பணி — **சி. சீவரத்தினம்**

ஆறுமுகநாவலர் (ஆங்கிலம்) — **சு. சிவபாதசுந்தரம்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (ஆங்கிலம்)

**வை. முத்துக்குமாரசாமி**

யாழ். மத்திய கல்லூரிச் சரித்திரம் (ஆங்கிலம்)

**சேர் பொன்னம்பலம் இராமநாதன் சொற்பொழிவுகள்**

(ஆங்கிலம் 85 — 88 பக்கம்)

## வடமொழி நூல்கள்

கிரியாதீபிகை
தேவி காலோத்தரவிருத்தி
பூர்வ காரணுகமம்
சம்ஸ்கிருத அகராதி
கிருஹிய சூத்திரம்
இலகு கௌமுதி

## ஏடுகள்

சிவஞானபோதம் — சிற்றுரை
சிவஞானசித்தியார் — ஞானப்பிரகாசர் உரை
வடமொழிச் சிவஞானபோதத் தமிழ் உரை
(ஆசௌச விளக்கம்)
சிவஞானபோத விருத்தி (வடமொழி)
தத்துவக்கட்டளை முதலியன
பஞ்சலக்கண மூலம்
சிவஞானசித்தியார் சுபக்கம் — ஞானப்பிரகாசர் உரை
பஞ்சாக்ஷர கற்பம் முதலியன
சித்தியார் உரை சிவாக்கிரகயோகிகள்
இலிங்கபுராணம்
கந்தபுராணம் மூலம்
விபூதி உருத்திராக்க மகிமை (வடமொழி)
சைவபூஷணமும் தமிழ் உரையும்
பிராயச்சித்த விதி
தக்ஷணமூர்த்தி சஹஸ்ரநாம தோத்திரம்
(ஜானகி சரணம்)
அநுபவ வெண்பா, உபதேச வெண்பா முதலியன
நித்திய கன்மநெறி
சிவப்பிரகாசம் உரை
திருவருட்பயன் திருக்களிற்றுப் படியார்—
இருபா இருபஃது நெஞ்சுவிடு தூது
சிவரகசியம்
துறைசைக்கோவை
சித்தாந்த சிகாமணி (வடமொழி)
நல்லைக் கிள்ளைவிடு தூது
நாவலர் ஐயாவின் அக்ஷராரம்ப ஏடு.

சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்காக, நாவலர் புத்தகக் கண்காட்சிக் குழுத் தலைவர் திரு. ச. அம்பிகைபாகன், B. A. அவர்களால் வெளியிடப்பட்டது. உ 180-6/69